<u>IN THE COURT OF THE DISTRICT MUNSIF OF ARAKKONAM</u>

O.S.NO. 100/2018

| | | |
|---|---|---|
| Deposition of Witness | : | PW-1 |
| Name | : | குணசேகரன் |
| Father Name /W/o | : | கோவிந்தராஜ் |
| Caste | : | இந்து |
| Calling | : | - |
| Address | : | சிறுனமல்லி கிராமம் அரக்கோணம் வட்டம். |

Solemnly affirmation accordance with the provision of Act X 1873 on the day of 08.06.2023.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி :-

1. இந்த வழக்கு சொத்து விவரத்தில் வீடு உள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. 10.10.2018ல் வழக்கு சொத்தில் என் அனுபவத்தை யார் இடைஞ்சல் செய்தார்கள் என்று சொல்லியுள்ளேனா என்றால் என் அக்கா நாகலட்சுமி, மற்றும் அவர் மகள் சிவசங்கரி இடைஞ்சல் செய்தார்கள். எத்தனை மணிக்கு இடைஞ்சல் செய்தார்கள் என்றால் மாலை நேரம். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் 2 முறை புகார் கொடுத்தேன். எந்த தேதியில் புகார் கொடுத்தேன் என்றால் தேதி தெரியாது. புகாரின் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 என் தந்தை கோவிந்தராஜ் பெயரில் உள்ளது என்றால் ஆம். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் என் தந்தை எனக்கு எழுதிவைத்தது என்றால் ஆம்.

2. என் தங்கை வசந்திக்கும் என் தந்தை செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்றால் ஆம். வசந்திக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவண எண்.7342/2007 என்றால் ஆம். என் அக்கா நாகலட்சுமிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவண

எண்.7340/2007 என்றால் ஆம். நான் தாக்கல் செய்த வழக்குரையில் சொத்து விவரத்தில் வீட்டை பற்றி சொல்லாததால் வழக்க தாக்கல் செய்த தேதியில் வீடே இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அடையாள அட்டைகளில் உள்ள முகவரி வேறு இடத்திற்குரியது என்றால் அது பழைய வீட்டு முகவரி தாவா சொத்தில் இல்லை ஊரில் உள்ளே உள்ளது. 13.05.2010ல் சர்வே.எண்.30ல் 11 1/2 செண்ட் நிலத்தை என் அக்கா நாகலட்சுமிக்கு நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் ஆம். நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சொத்து விவரத்தில் சொல்லியுள்ள 16 3/4 செண்டில் தான் நான் எழுதிக்கொடுத்த 11 1/2 செண்ட்டும் வருகின்றது என்றால் ஆம்.

3. மறுபடியும் 2 1/2 செண்டும் என் அக்காவிற்கு கிரையம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சர்வே எண் மாறிவிட்டது என்று சொல்லி என்னிடம் எழுதி வாங்கினார்கள். தாவாவில் நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.4ன் படி 11 1/2 செண்டும், விற்பனை ஆவண எண்.6952/ 2010ன் படி 2 1/2 செண்டும் என் அக்காவிற்கு விற்பனை செய்தேன் என்றால் ஆம். மீதமுள்ள 2 3/4 செண்டை 600, 600 சதுரடி என்று மனைப்பிரிவுகளாக போட்டேன் என்றால் ஆம். அதில் ஒரு மனையை அமுல் என்பவருக்கு விற்பனை செய்தேன் என்றால் ஆம். மற்றொரு மனையை செல்லையன் என்பருக்கு விற்றேன் என்றால் ஆம். அமுல் மற்றும் செல்லைய்யன் அவர்கள் வாங்கிய மனையை என் அக்காவிற்கு விற்பனை செய்து விட்டார்கள் என்றால் ஆம். அவர் வாங்கிய இடத்தில் தான் நாகலட்சுமி வீட்டை கட்டியுள்ளார் என்றால் ஏற்கெனவே இருந்த வீட்டை இடித்து விட்டு தான் அந்த கடகால் மீதே கட்டியுள்ளார்.

4. எனக்கு குடி பழக்கம் உள்ள காரணத்தினால் வீண்செலவு செய்துக்கொண்டு பிரதிவாதியிடம் இருந்து பணம் பறிப்பதற்காக வழக்கு போட்டுள்ளேன் என்றால்

சரியல்ல. கிரையத்தை பெற்றுக் கொண்டு அவர் பெயரில் பட்டா மாறுதல் செய்யாத காரணத்தினாலும், என் பெயரில் பட்டா இருப்பதை வைத்துக்கொண்டு தவறாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்த மொத்தம் 16 3/4 செண்டை நான் விற்பனை செய்து விட்டதல் எனக்கு அதில் உரிமையில்லை என்றால் சரியல்ல. நான் காசை வாங்கவேயில்லை விற்பனை செய்து விட்டதாக அவர்களே சொல்கிறார்கள். என் வழக்குரையில் ஆவணத்தை பிரதிவாதி ஏற்படுத்திக்கொண்டதாக சொல்லியுள்ளது என்ன ஆவணம் என்றால் அனைத்து ஆவணங்களும் ஏற்படுத்தியது தான். அமுல் மட்டும் செல்லையனிடம் மட்டும் தலா ரூபாய் 1 இலட்சம் வாங்கினேன்.

5. பத்திர அலுவலகத்தில் என்ன ஆவணம் என்று என்னிடம் கேட்ட பிறகு தான் பதிவு செய்வார்கள் என்றால் அந்த சமயத்தில் என்னிடம் கேட்டார்கள் நான் பணம் வாங்கியதாக சொன்னேன் கையெழுத்து போட சென்னார்கள். என் அக்கா பெயரில் இருந்தால் தான் லோன் கிடைக்கும் என்று என் அக்கா சொன்னார். சொத்து என்றைக்கும் என்னுடையது என்று தான் சொன்னார். அவ்வாறு நான் தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் நான் வழக்கறிஞரிடம் சொல்லியிருந்தேன். தற்சமயம் இந்த வழக்கு சொத்து என்ன நிலையில் உள்ளது என்றால் கொஞ்ச இடத்தில் வீடும் மீதியிடம் காலியாக உள்ளது. வீடு வழக்கு சொத்தில் தான் உள்ளது. நான் சொல்வது போல் வீடு இருந்திருந்தால் சொத்து விவரத்தில் காட்டியிருப்பேன் என்றால் வீடு உள்ளது. வீடு இருப்பதாக ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் தெரியவில்லை.

6. வழக்கு தாக்கல் செய்ததில் இருந்து நான் எங்கு உள்ளேன் என்றால் பக்கத்தில் வாடகை வீட்டில் உள்ளேன். வழக்கு சொத்து பிரதிவாதி நாகலட்சுமியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் நான் தான் அவரை போல் நடந்து கொள்ளாமல் விட்டு வைத்துள்ளேன். அவர் என் பாத்திரத்தை எல்லாம் எடுத்து வெளியில் தூக்கி போட்டார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்போ, வழக்கு தாக்கல் செய்த பின்போ, அங்கு வீடு

இருந்ததற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். பிரதிவாதிக்கு லோன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும் பணம் கொடுத்து தான் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தை ரத்து செய்ய வேண்டும் என்று பரிகாரம் இந்த வழக்கில் கேட்க வில்லை என்றால் கேட்டுள்ளேன். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும், நிரத்தர உறுத்துக்கட்டளை மட்டும் தான் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சொத்தை நான் அனுபவித்து வருகிறேன் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி இந்த வழக்கு சொத்தில் உள்ளதால் நான் நிரத்தர உறுத்துக்கட்டளை கேட்க முடியாது என்றால் சரியல்ல. பொய்யான சங்கதிகளில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. கதவு எண்.7 தெரு எண்.1 சிறுனமல்லி என்ற முகவரியில் உள்ள வீடு எங்கு உள்ளது என்றால் ஊரில் உள்ளது வழக்கு சொத்து கிடையாது.